முதலாவது கூடுதல் உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்.

நாள். 16.10.2025

O.S. 110/2018

வா.சா. 1 - சுபாஷ்

பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் இந்த வழக்கை எந்த ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 1952 குடும்ப முன்னோர்கள் எழுதிய பாகப்பத்திரத்தின் அடிப்படையில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பாகப்பத்திரத்தின் அடிப்படையில் 14.06.2002 ல் ஏற்படுத்திய பாகப்பத்திரத்தில் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அது பெரியப்பாவிற்கும், பிரதிவாதிக்கும் இடையே ஏற்பட்ட ஆவணம். அதனால் தாக்கல் இல்லை. இந்த பிரதி என் பெரியப்பாவின் மகனின் மகன் ஆவார்.

14.06.2002 ம் தேதியில் ஆவணத்தை பிராதுடன் தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரி. மேற்படி ஆவணம் எனக்கு தேவையில்லை என்பதால் நான் முதல் விசாரணையில் எனது தரப்பு ஆவணமாக குறியீடு செய்யவில்லை. வழக்குச் சொத்து 1 பட்டிகைச் சொத்தாக பிராதில் காண்பித்துள்ளேன். வழக்குச் சொத்தின் சர்வே எண் 101 ஏ. வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் வழக்குப் பட்டிகைச் சொத்தை நான் சேர்த்துள்ளேன். 1957 வா.சா.ஆ.1 ஆவணப் பத்திரத்தின் படி எனது அப்பாவிற்கு பாகம் கிடைத்தது. எனது அப்பாவிற்கு மொத்தம் 4 பிள்ளைகள். பூமணி, கோசலை, ருக்மணி, நானும் ஆகும். எனது தம்பி பாரதிதாசன் 1980 ற்கு முன்பாக இறந்துவிட்டார். அவருக்கு திருமணம் ஆகி குழந்தைகள் இல்லை. பாரதிதாசனின் மனைவி உயிருடன் உள்ளாரா என்றால் தெரியாது. அவர் 2 வது திருமணம் செய்து சென்று விட்டார்.

எனது தம்பி பாரதிதாசன் தொடர்பான எந்த சங்கதிகளையும் பிராதிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.1 ஆவணத்தில் மொத்தம் 4

பட்டிகைச் சொத்துக்கள் உள்ளது. அதில் என் அப்பாவிற்கு பி பட்டிகைச் சொத்துக்கள் பாகம் கிடைத்தது. அதன் விஸ்தீரணம் 9 சென்ட் ஆகும். எனது அப்பாவிற்கு கிடைத்த சொத்தைப் பொறுத்து அவர் உயிருடன் இருந்த காலத்தில் ஆவணம் எதுவும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை. எனது அப்பாவிற்கு கிடைத்த சொத்தை அவர் இறந்த பின்பு எனது அம்மா அந்த சொத்தைப் பொறுத்து அவர் உயிருடன் இருந்த காலத்தில் ஆவணம் எதுவும் எழுதி வைத்தாரா என்றால் இல்லை.

மேற்படி சொத்தைப் பொறுத்து எனது சகோதரிகள் எனக்கு விலைப் பத்திரம் எழுதிக் கொடுத்தார்கள். எந்த வருடம் என்றால் 2019 என்று நான் நினைக்கிறேன். வழக்கிற்கு முன்பாகவே எனது சகோதரிகள் எழுதிக் கொடுத்துவிட்டார்கள். மேற்படி விலை ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. வழக்கில் எனது சகோதரிகளுக்கும் வழக்குச் சொத்தில் அவகாசம் இருப்பதாக சொல்லி எனது சகோதரிகளுக்காகவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரி. அவர்களுக்கும் உரிமை வேண்டும் என்பதற்காக தாக்கல் செய்துள்ளேன். எனது சகோதரிகள் எனக்கு விலை எழுதிக் கொடுத்த பின்பு வா.சா.ஆ.1 பி பட்டிகைச் சொத்தில் உரிமை எதுவும் எனது சகோதரிகளுக்கு இருக்காது என்றால் சரி.

வழக்குச் சொத்து எதை நான் சொத்தாக காண்பித்தேன் என்றால் நான் குடியிருக்கும் வீட்டை ஒரே சொத்தாக எனது பிராதில் நான் விவரித்துள்ளேன். நான் குடியிருக்கும் வீடு சம்மந்தமாக எனக்கும் பிரதி -கும் எந்த தர்க்கமும் இல்லை என்றால் சரி. எனது வீடு மேற்கு பார்த்து அமைந்துள்ளது. எனது வீட்டிற்கு முன்பாக 16 அடி பாதை இருக்கிறது என்றால் சரி. அது குடும்ப பொது பாதை ஆகும். பிரதியின் வீடு மேற்குப் பக்கம் பார்த்து உள்ளது. பிரதிக்கும் இதே 16 அடி பாதை முகப்பாக உள்ளது என்றால் சரி.

அந்த 16 அடி பாதை யார்யாருக்கு அவகாசம் உள்ளது என்றால் வா.சா.ஆ.1

ஆவணத்தில் உள்ள ஏ முதல் டி பட்டிகைச் சொத்துக்கள் பாத்தியப்பட்ட அனைவருக்கும் அவகாசம் உள்ளது. மேற்படி பத்திரத்திலுள்ள மற்ற நபர்களை இந்த வழக்கில் தரப்பினர் ஆக சேர்க்கவில்லை என்றால் சரி. வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள ஏ பட்டிகைச் சொத்தில் 4 சென்ட் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். பாதை உட்பட 4 சென்ட் ஆகும். அந்த 4 சென்ட்டில் தெற்கனைய பாதை உள்ளது.

நான் பிரதிவாதிக்கு 4 சென்ட் எவ்வாறு பாத்தியம் என்றால் எனக்கு தெரியாது. 2002 ம் ஆண்டு பாகப்பத்திரத்தினை நான் படித்துப் பார்த்தேன் தற்போது எனக்கு ஞாபகம் இல்லை. பிராது பத்தி 7 ல் மேற்படி 16.04.2002 ம் தேதி பத்திரத்தின் படி பிரதிவாதிக்கு கிடைத்த 4 சென்ட் இடத்தை சொல்லியுள்ளேனா என்றால் எனக்குத் தெரியாது. இதே சங்கதிகளை எனது முதல் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் எனக்குத் தெரியாது. இந்த வழக்கு சம்மந்தமாக வழக்கறிஞரிடம் தகவலை யார் சொன்னது என்றால் நான் தான் சொன்னேன்.

வா.சா.ஆ.1 ஆவணத்தில் ஏ பட்டிகைச் சொத்தில் 4 சென்ட்டில் ஒரு வழி பாதை என்று விவரிக்கப்பட்டுள்ளதா என்றால் சரிதான். எனது அண்ணன் 6 அடி பாதை விட்டு அவர் காம்பவுண்ட் கட்டியுள்ளார். அந்த பாதை 40 அடி நீளமாகும். அதில் கீழ் அற்றத்தில் 9 அடி நீள 6 அடி அகல அறை கட்டியுள்ளார். மேற்படி 6 அடி அகல பாதைக்கு ஆவணம் எதுவும் எழுதியுள்ளோமா என்றால் இல்லை. பிரதியின் வீட்டை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்டி நடுவில் வீடு உள்ளது என்றால் சரி. பிரதிவாதி நடுவில் உள்ள வீட்டை இடித்து வீடு புதிதாக கட்டியுள்ளார் என்றால் சரி. பழைய காம்பவுண்ட் அப்படியே உள்ளது என்றால் இல்லை. கன்னிமூலையில் 4 அடி சுவரை இடித்து அறை கட்டிவிட்டார். பழைய காம்பவுண்ட் சுவர் அப்படியே உள்ளது.

தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் பிரதியின் பழைய காம்பவுண்ட்

சுவர் என்றால் சரி. மேற்கே உள்ள காம்பவுண்ட் சுவரின் புகைப்படம் ஆகும். கிழக்கே உள்ளதை மறைத்து எடுத்துள்ளார்கள். பழைய காம்பவுண்ட் சுவர் அப்படியே உள்ளது என்றால் சரி. அந்த புகைப்படம் பி.வா.சா. 1 ஆகும். ஆவணத்திற்கு எதிரான பாதையோ நிவாரணமோ கோர முடியாது என்றால் சரி. ராஜாக்கமங்கலம் குளச்சல் ரோட்டில் கணபதிபுரம் ஜங்சன் உள்ளது என்றால் சரி. அந்த ஜங்சனில் இருந்து 8 அடி பாதை வழியாக என் வீட்டிற்கு வர வேண்டும் என்றால் சரி.

8 அடி பாதை முடிந்த இடத்தில் காலி இடம் உள்ளது அதில் வா.சா.ஆ.1 ல் அவகாசப்பட்ட நபர்கள் கார்களை நிறுத்துவார்கள் என்றால் சரி. அந்த காலி இடம் 2 ½ சென்ட் விஸ்தீரணம் ஆகும். அந்த இடத்தில் வெளிநபர்களுக்கு கார்களை நிறுத்த அவகாசம் இல்லை என்றால் சரி. அந்த கார் நிறுத்தும் இடத்தின் வழியாக நான் எனது இரு சக்கர வாகனத்தில் வீட்டிற்குச் சென்று வருகிறேன். நீதிமன்ற ஆணையர் இடத்திற்கு வந்து அளந்தார். அப்போது வா.சா.ஆ.1 அல்லது 2002 பாகப்பத்திரத்தை அனுசரித்து அளந்தாரா என்றால் சரி. ஆவணங்களின் அடிப்படையில் அளந்தார்.

வழக்குச் சொத்தின் அரசு புல வரைபடத்தை நான் பார்த்துள்ளேன். அதனை எனது வழக்கறிஞரிடம் தாக்கல் செய்துள்ளேன் . இந்த வழக்கில் அதை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. தாலூகா புல வரைபடத்தில் 6 அடி பாதை குறித்து எந்த வரைபடமும் இல்லை என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்த போது பிரதிவாதியின் இடம் எவ்வளவு இருந்தது என்று எனக்குத் தெரியாது. ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையை நான் படித்துப் பார்க்கவில்லை. ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் பழைய காம்பவுண்ட் சுவரை புகைப்படத்தில் காட்டியுள்ளார் என்றால் சரி.

பொன்னம்மாள் டெக்ஸ்டைல்ஸ் பிரதிவாதி இடத்தின் கிழக்கே அமைந்துள்ளது. அதனை ஆணையர் புகைப்படத்தில் காட்டியுள்ளார். பிரதிவாதியின் வீட்டிற்கு தெற்குப்

பக்கம் ஒரு வழி பாதை உள்ளது என்றால் சரி. நான் இந்த வழக்கில் பரிகாரம் என்ன கேட்டுள்ளேன் என்றால் கிழமேல் 6 அடி வீதியில் கிழக்கில் உள்ள பிரதிவாதியின் கட்டுமானத்தை அகற்ற கேட்டுள்ளேன். பிரதிவாதி பாதையை அடைத்து கட்டுமானம் கட்டவில்லை என்றால் சரியல்ல. 40 அடி நீள 6 அடி அகல பாதையில் உரிமை கோருவதற்கு எனக்கு எந்த ஆவணமும் இல்லை என்றால் சரியல்ல.

மூலப் பத்திரமான 1957 ல் உள்ளது. அந்த பத்திரத்தில் ஒரு வழி பாதை மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும், 40 அடி நீள 6 அடி அகல பாதை சொல்லப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வீட்டு வரி ரசீது, குடிநீர் வரி ரசீதுகளுக்கு இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டிற்கு அங்கீகார உத்தரவு மற்றும் வரைபடத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி. இந்த வழக்கில் ஆணையர் தாக்கல் செய்த வரைபடம் மற்றும் அறிக்கை ஒருதலைபட்சமானது என்றால் சரியல்ல. வேறு ஆணையரை நியமித்து இடத்தை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய ஆட்சேபனை உள்ளதா என்றால் எனது வழக்கறிஞரிடம் கேட்க வேண்டும்.

மேற்படி ஆணையர் அறிக்கையை ரத்து செய்து புதிதாக ஆணையர் நியமிக்க பிரதி மனு தாக்கல் செய்தார் என்றால் எனக்குத் தெரியாது. வீட்டு உரிமை காண்பிப்பதற்கும் பாதையில் உள்ள எனது உரிமையை காண்பிப்பதற்கும் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாமல் வழக்கை நடத்தி வருகிறேன் என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி எனக்கு எவ்வாறு சொத்து பாத்தியம் என்பது சொல்லமுடியாது என்றால் சரிதான்.

வழக்குப் பட்டிகைச் சொத்துகளின் விவரம் முழுமையாக தெரியாமல் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவர் கிரயம் பெற்ற இடத்தில் வீடு கட்டி வாழ்ந்த வருகிறார் என்றால் சரி பாதையிலும் ஒரு அறை எடுத்துள்ளார். உண்மையில் நான் சொல்வது போல் பாதையில் அறை இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியின்

தெற்குப்பக்கம் உள்ள பாதையை தொட்டு அருள்சாமி, அன்புசாமி ஆகியோர்களின் காம்பவுண்ட் சுவர் உள்ளது. அருள்சாமி, அன்புசாமி அவர்களது பூமியில் காம்பவுண்ட் சுவர் கட்டியுள்ளார்கள் என்றால் எனக்குத் தெரியாது. அவர்களது காம்பவுண்ட் சுவர் 3 ½ சுவர் உயரம் இருக்கும். அந்த காம்பவுண்ட் சுவருக்கும் பிரதி வாதியின் காம்பவுண்ட் சுவருக்கும் இடையே எவ்வளவு இடம் உள்ளது என்றால் 6 அடி உள்ளது. மேற்கே செல்ல செல்ல குறைகிறது.

அருள்சாமி, அன்புசாமி காம்பவுண்ட் கட்டும் போது நான் எந்த ஆட்சேபனையும் சொல்லவில்லை. பிரதிவாதியின் 60 வயதுடைய காம்பவுண்ட் சுவர் தற்போதும் அப்படியே உள்ளது என்றால் சரியல்ல. பாதையில் எனக்கு எந்த உரிமையும் இல்லாமல் பிரதிவாதி மேல் வழக்கு பதிவு செய்து பிரதிவாதியை கஷ்டப்படுத்துகிறேன் என்றால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் 4 வது பக்கத்தில் 3 வது பத்தியில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் வழக்கிற்காக சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் என்றாலும் அவை பொய்யானவை என்றாலும் சரியல்ல.